பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 32 உ செவ்வாய்க்கிழமை (16-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 223

# கட்டைக்காட்டுப் பகுதியில் உக்கிரச் சண்டை வெடித்தது!

## இராணுவ உயர் அதிகாரி உட்பட படையினர் பலர் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கட்டைக்காட்டில் தரையிறங்கிய ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று நண்பகல் கடும் சண்டை வெடித்தது! தொடர்ந்து இடம் பெற்றுவரும் உக்கிர யுத்தத்தில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் உட்பட படையினர் பலர் உயிரிழந்தனர்.

தரையிறங்கிய துருப்புகள் விடுதலைப் புலிகளின் சுற்றிவளைப்பில் சிக்கி பேரழிவை எதிர்நோக்கியிருப்பதாகவும் தெரியவந்தது.

நேற்று முன்தினம் பிற்பகலில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் ஸ்ரீலங்காப் படையினரின் முதல் அணி தரை இறக்கப்பட்டது. துருப்புகள் தரையிறக்கம் நேற்று நண்பகல் வரை தொடர்ந்தது.

பெரும் எண்ணிக்கையில் தரையிறங்கிய துருப்புகள் தரையிறங்கிய இடத்தில் தங்களை நிலைப்படுத்திக் கொண்ட பின்னர்—

பிற்பகல் 2.30 மணியளவில் ஒரு பகுதி படை அணி ஆனையிறவுப் பக்கமாக நகர்ந்து முன்னேறியது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 3 ஆயிரம் துருப்புகள் தரையிறக்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 16

கிழக்கு மாகாண இராணுவத் தலைமையகமான திருகோணமலையில் இருந்தே இரண்டு விசேட படைப் பிரிவுகள் ஆனையிறவுக்கு வடகிழக்கே கடல் வழியாக தரையிறங்க அனுப்பி வைக்கப்பட்டன.

—இவ்வாறு இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஸ்ரீலங்கா வானொலி அறிவித்தது.

கஜபா படை அணியின் முதலாம், இரண்டாம் பிரிவுகள், சிங்கபடை அணியின் முதலாம் பிரிவு, ஸ்ரீலங்கா இராணுவத் துணைப்படையின் மூன்றாம் பிரிவு ஆகியனவே தரையிறங்கின என்றும் தெரிவிக்கப்பட்டது.

தரையிறக்கப்பட்ட படைப் பிரிவில் 3 ஆயிரம் துருப்புகள் வரை இருப்பதாக கருதப்படுகின்றது. (உ-3)

## 2 பொலீஸார் காயம்

கொழும்பு, ஜூலை 16

மட்டக்களப்பு கல்லடியில் உள்ள நாவற்குடா பொலீஸ் காவல் அரண் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் இரு பொலீஸார் காயமடைந்தனர். பாதுகாப்புப் படை வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (உ-3)

## 6 படையினர் பலி!

கொழும்பு, ஜூலை 16

அனுராதபுரம்—திருகோணமலை மாவட்டங்களின் எல்லையில் ஜானகபுர என்ற இடத்தில் உள்ள இராணுவ நிலை ஒன்றின் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறு படையினர் உயிரிழந்ததாக ஸ்ரீலங்கா வானொலி அறிவித்தது. [உ-3]

## முகாமை சூழவும் தொடர்ந்து மோதல்

ஆனையிறவு முகாம் பகுதியிலும் நேற்றுமுழுவதும் கடும் சண்டை நடைபெற்றதாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவித்தன.

படையினரின் காவல் அரண்களுக்கு மிக நெருக்கமாக நின்று புலிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

புலிகளின் பசிலன் தாக்குதல்களினால் முகாம் தொடர்ந்து அதிர்ந்து கொண்டிருப்பதாகவும்—

புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தவும், முகாம் பகுதிக்குள் உணவு மற்றும் பொருள்கள் அடங்கிய பொதிகளை வீசவும் —

குத்திப் பதிய முயற்சிக்கும் பொம்மர்கள் மற்றும் அவ்ரோக்கள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளினால் தாக்குதல் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இரு அதிகாரிகள் உட்பட 22 படையினரே பலியாம்!

கொழும்பு, ஜூலை 16

ஆனையிறவு. இராணுவ முகாம் சண்டையில் இதுவரை இரண்டு அதிகாரிகளும், இருபது படையினரும் அரசு தரப்பில் கொல்லப்பட்டனர் என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரங் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

70 படையினா காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முற்றுகைக்கு உள்ளான ஆனையிறவு முகாமில் 18 படையினரும்—

கடல் வழியாகத் தரையிறங்கிய படையினரில் நால்வரும் சண்டையில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவுச் சண்டையில் ஈடுபட்டுள்ள 800க்கு மேற்பட்ட அரசுப் படையினருக்கு உதவியாக அனுராதபுரம் தளத்தில் இருந்து போர் விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டது.

## 20 புகழுடல்கள் நேற்று கோப்பாயில் தகனம்

ஆனையிறவுப் போரில் தமது இன்னுயிரை நீத்த 20 வேங்கைகளின் புகழுடல்கள் நேற்றுப் பிற்பகல் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

பல நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு வந்து தமது இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்தினர்.

பிற்பகல் 4-30 மணியளவில் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

'பாண்ட்' வாத்தியம் இசைக்க விடுதலைப் புலிகள் அணிவகுத்துச் சென்றனர். வழியெங்கும் மக்கஅ மலர் தூவி அஞ்சலி செய்தனர்.

இறுதியில் கோப்பாய் மாவீரர்கள் துயில் கொள்ளும் புனித இடத்தில் புகழுடல்கள் தீயுடன் சங்கமமாயின. [ஓ-154]

## தென்மராட்சியை நோக்கி ஒரே இரவில் 40 ஷெல்கள்!

சாவகச்சேரி, ஜூலை 16

தென்மராட்சிப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் [ஞாயிறு] இரவு மட்டும் சுமார் 40க்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

பலாலியில் இருந்து ஏவிவிடப்பட்டதாகக் கருதப்படும் இந்த ஆட்லறி ஷெல்கள் நுணாவில், சாவகச்சேரி, சங்கத்'தானை, அல்லிக்கரை, வேம்பிராய்வெளி, கச்சாய்க் கடல் மற்றும் சில பகுதிகளில் விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன.

ஷெல்லுக்கு சங்கத்தானையில் ஒருவரும், நுணாவிலில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும் உயிரிழந்தனர் என்பதும்—

மற்றும் 8 பொதுமக்கள் காயமடைந்தனர் என்பதும் தெரிந்தவையே.

ஷெல் வீச்சுக்கு இலக்காகி சில வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. பல கால்நடைகளும் பலியாகின. [ஓ-31]

## பல்கலை விரிவுரையாளர் பலாலி ஷெல்லுக்குப் பலி!

### நுணாவிலில் ஞாயிறிரவு சம்பவம்

சாவகச்சேரி — நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் (ஞாயிறு) இரவு விழுந்த பலாலி ஷெல்லுக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் பலியானார்.

பொருளியற்றுறையைச் சேர்ந்த அரசறிவியல் விரிவுரையாளரான கு. ரஞ்சகுமார் (27வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

''வளர்ந்து வரும் அரசறிவியல் கல்விக்கும் யாழ். பல்கலைக்கழகத்திற்கும் திரு. ரஞ்சகுமாரின் மறைவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்'' என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது அஞ்சலிச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அதே தினம் சங்கத்தானையில் ஷெல்லுக்குப் பலியானவர் நாகர்கோவில், குடாரப்புவில் இருந்து இடம் பெயர்ந்து வந்திருந்த கார்த்திகேசு சிவசிதம்பரம் (40 வயது) என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-5)

## எழுத்தாளரும் குடும்பமும் நித்திரைப் பாயில் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 16

பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்று நெல்லியடியிலுள்ளமுடக்காடு என்னும் இடத்தில் வீழ்ந்து வெடித்தபோது ஒரு குடும்பமே பலியானது.

நேற்றுமுன்தினம் (ஞாயிறு) நள்ளிரவு இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

தபால் பகுதியில் கடமை புரிபவரும் பிரபல எழுத்தாளருமான கந்தசாமிபேரம்பலம் [நெல்லை க. பேரன் வயது 43], அவரது மனைவி உமாதேவி [வயது 35], மகன் உமாசங்கர் [வயது 15], மகள் ஷர்மிளா (வயது 7) ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

உமாதேவி குற்றுயிரான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார். கணவரும் இருபிள்ளைகளும் ஷெல் விழுந்த இடத்திலேயே பலியானார்கள்.

இவர்கள் நால்வரும் வீட்டு 'ஹோலு'க்குள் நித்திரையாக இருந்தசமயம்

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாடசாலை சிறுவருக்கு உரிய ஹீரோ [Hero] துவிச்சக்கரவண்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு மு. விமலநாதன், 16/12, விதானையார் வீதி, ஈச்சமோட்டை. [4200]

ஆறு வாரங்கள் நிரம்பிய அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 222, லக்குமி வாசா [வட்டுக்கோட்டை, இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்] தெலலிப்பளை வீதி, சித்தன்கேணி. (17513)

### உடன் விற்பனைக்கு

எம்மிடம் புதிய, பழைய சினிமாப்பட வீடியோ கொப்பிகள் மலிவான விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மீரா வீடியோ விஷன், மருதடிப் பிள்ளையார் கோவிலடி, நுணாவில் மேற்கு, விளைவேலி, சாவகச்சேரி. (4195)

### விற்பனைக்கு

ஆங்கில உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி (English Teachers Exam Guide) வெளிவந்து விற்பனையாகிறது. நடைபெற்ற 5 வருட மாதிரி வினா விடைகளுடன் 15 கட்டுரைகளும், கடிதங்களும் அடங்கியவை. அஸ்ரன் வெளியீடு. விலை 79/- [எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்] (சி/0197)

### மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவைக்குமான அழுக்கு போக்கி மில்க்வைற் திரவ சவர்க்காரம் (Liquid Soap) ½ போத்தல் ரூபா 45/- மட்டுமே. லேபலுடன் கூடிய வெற்றுப் போத்தல் ஒவ்வொன்றுக்கும் ரூபா 2/- விற்பனை விலையில் தள்ளுபடி. [சி/0237]

### அறிவித்தல்

புளியங்கூடல் வேலணையில் இயங்கி வந்த எனது வைத்திய நிலையங்கள் தற்காலிகமாக மானிப்பாய் வீதியில் உள்ள 198/1, பொன்னப்பா ஒழுங்கையில் [ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில்] இயங்கி வருகின்றது. வைத்தியர் ச. சிவசம்பு. [17530]

### தவறிவிட்டது

தம்பையா சிவகுரு ஆகிய எனது அடையாள அட்டை [34318095V] சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (17532)

## லட்சார்ச்சனை

கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த லட்சார்ச்சனை இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. சங்காபிஷேகம் இம்மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். (அ)

## மாத்தளையில் தேடுதல்

மாத்தளை மாவட்டத்தில் உள்ள 27 தோட்டங்களை பொலீஸார் முற்றுகையிட்டு வீடு வீடாகத் தேடுதல் நடத்தினர்.

தகவல் ஒன்றைத் தொடர்ந்து அத் தேடுதல் நடத்தப்பட்டதாகவும்பொலீஸார் தெரிவித்தனர். (இ-எ)

---

நந்தாவில் கற்புலத்து

## மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை

## யாப்புத் தயாரித்தல்

10-03-1991 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின்படி மேற் கூறப்பட்ட ஆலயத்திற்கான யாப்பு தயாரிப்பதற்கு ஆலயப் பொதுச்சபை அங்கத்தவர்களிடமிருந்து அபிப்பிராயங்கள் எழுத்து மூலம் கோரப்படுகின்றன. இவை 31-07-1991 புதன்கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர்,
நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குறிப்பு: கடிதங்களை இந்துசமய அபிவிருத்திச் சங்கப் பணிமனையிலுள்ள தபாற் பெட்டியில் சேர்க்கவும்.

(4201) - ஆலய பரிபாலன சபை.

---

## 31 ஆவது நாள் நினைவு தினம்

தோற்றம்: 30-09-1948

மறைவு: 16-06-1991



அமரர்

### சிற்றம்பலம் தியாகராசா

(இ. மி. ச. - வேலணை)

பண்பால் உயர்ந்துண்மை அன்பாய் எவரோடும்
மண்பால் உறவாடித் தான்வாழ்ந்து - விண்பாலெம்
சிற்றம் பலம் தியாக ராசா விரைந்தேகி
இற்றைக் கொருமாத மாம்.

அன்பனே! நீ இவ்வுலகை விட்டு மறைந்து போன முப்பத்தோராவது நினைவு நாளாகிய இன்று; உன்னை நினைவு கொள்வதுடன், உன் ஆன்மா அமைதியடைய வேண்டி இறைவனை இறைஞ்சுகிறோம்.

உன் பிரிவால் துயருறும்,
மின் அத்தியட்சகர், ஊழியர்கள்,
இலங்கை மின்சார சபை -வேலணை. [17273]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 01 - 08 - 1933

மறைவு: 28 - 06 - 1990

திதி: 16 - 07 - 1991

### அமரர் தம்பிப்பிள்ளை கணேசன்

எமது செல்வமே! கணேசா! நீ எங்களைப் பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும் மறக்க முடியாதையா உமது பிரிவை. உமது சிரிப்பும், பேச்சும் அம்மா, அம்மா என்ற அன்புக் குரலும் எம்மால் மறக்க முடியுமாய்யா உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்;
அம்மா, சகோதரர்கள் மைத்துனர்கள்
பெறாமக்கள்.

இல. 317, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (17523)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

### சண்முகம் ஆனந்தமகேசன்

தோற்றம்: 19 - 01 - 1952 மறைவு: 27 - 06 - 1990

திதி: 16 - 07 - 1991

நேற்றைய நிகழ்வு போல
நெஞ்சமே கனக்குதைய்யா,
வாழ்க்கைதனை வெறுத்தோ
வானுலகு சென்று விட்டீர்
கூற்றுவன் கவர்ந்து ஆண்டு
ஒன்றல்ல பல சென்றாலும்
என்றும் வீற்றிருப்பீர் எங்கள்
எண்ணச் சிறைதனிலே
''உங்கள் ஆன்மா சாந்தியடைவதாக''

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், தாய்,
சகோதர சகோதரிகள்
மைத்துனர், மைத்துனிகள்
மருமக்கள், பேர்த்தி, துவாரகா

20 சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம். [17280]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 02 — 07 — 1935



உதிர்வு: 16 — 07 — 1988

அமரர்

### இராமலிங்கம் பாலேந்திரா

[புகைப்படப்பிடிப்பாளர்]

அன்புள்ள டடா!

தாயன்புடன் எங்களைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்தீர்கள். நாங்கள் பூவாகிக் காயாகிக் கனியாகிப் பலன்தரும் வேளையில் காலன் உங்களைக் கவர்ந்தானே ஆண்டு மூன்றாகியும் தங்கள் பிரிவைத் தாங்க முடியவில்லையே. எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

மனைவி: நீற்றா பாலேந்திரா,
பிள்ளைகள்: ரஞ்சனி, ரமேஸ்,
ராஜன், றூபன்.

நாரந்தனை, ஊர்காவற்றுறை. (17375)

---

## 3 ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு: 24 — 08 — 1922



உதிர்வு: 16 — 04 — 1991

### அமரர் ம. தொமஸ்

(இளைப்பாறிய விவசாய இலாகா உத்தியோகத்தர் - அடம்பன்)

என்றுமே எம் உள்ளங்களை விட்டகலாத எம் அன்புத் தந்தையே! எம்மை எக்குறையும் இன்றி வளர்த்து சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ வழி வகுத்த எம் தெய்வமே! எம் இதயத்தில் உங்கள் நினைவுகள் என்றுமே நீங்காது நிலைத்திருக்கும்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
பாசமிகு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

''பத்திமா வாசா''
குமானாயங்குளம்,
அடம்பன். (17276)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### குண்டு வீச்சு கொலைகள்

ஆனையிறவில் போர் தொடர்கிறது. பண்டைக் காலத்து அரசர்கள் நடத்தும் போரைப் போல, இத்தனையாம் நாள் போர், இவ்வாறு நிகழ்ந்தது என்று நாள் எண்ணிக் குறிப்பிடும் அளவுக்கு அது பெரும் போராக நடந்து வருகிறது.

ஸ்ரீலங்கா இராணுவம், அரசின் விமானப்படை, கடற்படையின் உதவியின்றியே முகாம் பகுதிகளில் தனியாகப் பொருதும் நிலை உருவாகி இருக்கிறது. சிங்களப் படையும், மறத் தமிழர் படையும் நேருக்கு நேராகக் களச் சமராடுவதாக போர் முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருட மத்தியில் யுத்தம் தொடங்கிய ஆரம்பத்தில், இரு சாராருக்கும் மோதல் நடக்கும் இடங்களில் விமானப் படை தனது அசுரக் குண்டு வீச்சினால் இராணுவத்தின் போர்ப் பலத்தை அதிகரித்து வந்தது. அத்தோடு நின்றதா? இல்லை. போராளிகள் முகாம்களை அழிப்பதாகக் கூறிக் கொண்டு, பொதுமக்களின் வீடுகளுக்கும், அரசாங்க, தனியார் உடைமைகளுக்கும் குண்டு வீசி நாசம் செய்தது.

ஆனால் வெளியில் இருந்து கிடைத்த நெருக்குதலின் நிமித்தம், கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக, விமானப்படை தனது தாக்குதல் முறையில் மாற்றம் கொண்டு வந்தது போன்று நடித்தது. இரு சாராரும் மோதிக் கொள்ளும் இடங்களில் மட்டுமே விமானத் தாக்குதல் நடத்தும் முறையை அனுசரித்ததாக அது காட்ட எத்தனித்தது.

ஆனால் ஆனையிறவுப் போரில் பழைய நடைமுறையை மீண்டும் கைக்கொள்ளத் தொடங்கி விட்டது. ஆனையிறவுக் களத்தில் இராணுவத்தினரும், விடுதலைப் புலிகளும் அருகருகே நின்று நெற்றி முட்டமோதுகின்றனர். அதனால் விமானப் படை அங்கு குண்டு வீசித் தனது தரப்புக்கு ஆதரவு தரமுடியாது.

யுத்தமுனையில் இருந்து ஐந்து, ஆறு மைல்களுக்கு அப்பால் உள்ள இடங்களில், பொது மக்கள் செறிந்து வாழும் குடிமனைப் பகுதிகளில் கண்டபடி குண்டு வீச்சு நடத்தியிருக்கிறது. ஹெலித் தாக்குதல், ஷெல் தாக்குதல்களும் பெரும் எண்ணிக்கையில் நடந்திருக்கின்றன.

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் கண்மூடித்தனமாகக் குண்டு வீச்சு நடத்தி, ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், நூலகங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள், அரசாங்கக் கட்டடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களினாலும் பல பொதுமக்கள் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

யுத்த முனைக்கு வெளியே குண்டு வீச்சு நடத்தி மக்களைக் கொல்வதும், உடைமைகளை நாசம் செய்வதும் போர் வரன்முறைகளுக்கு ஒவ்வாது என்பதை அரசாங்கம் புரிந்து கொள்வது எப்போது?

கொழும்பில் குண்டுவெடித்துப் பொதுமக்கள் இறந்து விட்டால் அதனை பயங்கரமானதாகக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளும் அரசாங்கம், தமிழ்ப்பகுதிகளில் மக்கள் குண்டு வீச்சால் கொல்லப்படுவதையும் அதே அளவில் பயங்கரமானதாகக் கருதாதது ஏன்?

கொழும்பிலும் வெளியார் எவரும் விமானக்குண்டு வீச்சு நடத்தினால் மட்டும் தான் அரசுக்கு அந்த உணர்வு வருமோ!

# ஆனையிறவுப் போராட்டம்

# அரசுக்குப் பெரும் தாக்கம்

## எதிரி சிக்குண்ட நிலையில் போராடுகிறான்

யாழ்ப்பாணம், ஜூலை 16

''ஆனையிறவுப் போராட்டம் அரசுக்குப் பெரும் தாக்கத்தைக் கொடுத்துள்ளது. இது எமக்கு பெரு வெற்றி ஆகும். எதிரியானவன் சிக்குண்ட நிலையில் பெரும் போராட்டம் நடத்துகின்றான் என்பதை சகலரும் உணரவேண்டும். இந்தப் போராட்டத்தில் மக்கள் பங்களிப்பு அதிகரித்துள்ளதைக் கண்டு நாம் சந்தோசம் அடைகின்றோம். இந்த உதவிகள் ஓர் ஒழுங்கு கட்டுப்பாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும்''.

இப்படித் தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு: யோகரத்தினம் யோகி.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலர் உணவு, இளநீர் போன்றவற்றை வழங்கும் போது முகாம்களுடன் தொடர்பு கொண்டு ஒழுங்கின் கீழ் வழங்க வேண்டும்.

தொண்டர் சேவைகளில் உள்ளவர்கள் தமது விருப்பங்களை முகாம்களில் தெரிவித்து அதற்கேற்றவாறு கடமையாற்ற வேண்டும். ஓய்வு பெற்ற தாதிகள், ஓய்வு பெற்ற வைத்தியர்கள் சேவைக்கு முன்வரவேண்டும்.

போராட்டத்துக்கு பங்களிக்க வேண்டும் என்று மக்கள் தற்சமயம் கொண்டுள்ள அக்கறை தொடர்ந்து இருக்க வேண்டும்.

இந்தப் போராட்டத்தில் அதிகளவில் போராளிகள் காயமடைகிறார்கள். அவர்களுக்குத் தேவையான இரத்தத்தை வழங்க தயாராக இருக்க வேண்டும்.

கோட்டை, கொக்காவில், மாங்குளம் முகாம் தாக்குதல்கள் போலன்று ஆனையிறவுப் போர் மிகப் பெருமளவில் படைச் சிப்பாய்கள் கொண்ட முகாம் ஒன்றின் மீதான தாக்குதலாகும்.

இந்த முகாமை தாக்க முற்பட்டதோ, தாக்கி ஒரு முற்றுகைக்குள் வைத்திருப்பதோ மிகப்பெரிய வெற்றி. இந்த வெற்றிகள் தொடர மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். [இ-3]

## நெருக்குப்பிடியில் சிக்கித் தவிக்கும்

# ஆனையிறவு சிப்பாய்களை காப்பாற்றவே படை இறக்கம்

கொழும்பு, ஜூலை 16

விடுதலைப் புலிகளின் நெருக்குப்பிடியினால் சிக்கித் தவிக்கும் ஆனையிறவு முகாம் சிப்பாய்களைக் காப்பாற்றும் பொருட்டே சமீபமாகவுள்ள கடற்கரையோரப் பகுதியில் படை அணிகள் தரையிறக்கப்பட்டன.

இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இது குறித்து பி. பி. ஸி. கொழும்புச் செய்தியாளர் கருத்து தெரிவிக்கையில்—

ஆனையிறவு முகாம், விடுதலைப்புலிகளிடம் வீழும் ஆபத்து இல்லை என்று இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். என்றாலும் ஆனையிறவுக்குச் சமீபமாக கடற்கரையோரப்பகுதியில் படையினர் தரையிறக்கப்பட்டது ஆனையிறவு முகாமுக்கு நெருக்குதல் ஏற்பட்டுள்ளது என்பதையே தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஆனையிறவில் சிக்கியுள்ள படையினரின் நெருக்கடி நிலையைக் குறைப்பதற்காக இரண்டாவது முனை ஒன்றை திறப்பதே கடல் வழியாக படை இறக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முகாமைச் சூழ புலிகள் நன்றாக வேரூன்றி இருப்பதால், முகாம் அவர்களிடம் வீழ்ச்சியுறக் கூடிய சாத்தியம் இருப்பதாகத் தெரிகிறது.

— இவ்வாறு பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்துள்ளார். [ஒ-3]

# நம்பிக்கை வாக்கெடுப்பில் காங்கிரஸ் அரசு தப்பியது!

புதுடில்லி, ஜூலை 16

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் சிறுபான்மை அரசு நேற்று நம்பிக்கை கோரும் பிரேரணை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதன் மூலம் தப்பிப் பிழைத்தது.

எனினும் நாடாளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மையை நிரூபிக்கக்கூடியவிதத்தில் இந்திரா காங்கிரஸ் இல்லை என்பது நேற்றைய வாக்கெடுப்பில் புலனாகியது. ஜனதா தள் உட்பட சில முக்கிய பிரதான எதிர்க்கட்சிகள் நம்பிக்கை கோரும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பங்குபற்றாமல் தவிர்த்ததன் மூலம் காங்கிரஸின் சிறுபான்மை அரசு தப்பிப் பிழைக்க வாய்ப்பளித்தன.

காங்கிரஸின் சிறுபான்மை அரசு கவிழ்ந்தால் பூரண பெரும்பான்மை உள்ள ஓர் அரசை அமைக்கக்கூடிய வாய்ப்பு எந்தக் கட்சிக்கும் இல்லை என்பதாலும்—

உடனடியாகப் புதிய பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திக்கக்கூடிய நிலையில் நாட்டின் பொருளாதார மற்றும் நிதி நிலைமை இல்லை என்பதாலும் —

அதனால் உடனடிப் பொதுத்தேர்தலைத் தவிர்க்கும் நோக்குடன், நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கு எதிராக வாக்களிக்காமல் பிரதான எதிர்க் கட்சிகள் ஒதுங்கிக் கொண்டன.

நேற்றைய வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக [illegible] வாக்குகளும் எதிராக 112 வாக்குகளும் கிடைத்தன.

தற்சமயம் 506 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கு இந்திரா காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு 12 ஆசனங்கள் குறைவாக உள்ளது என்பதை இது வெளிப்படுத்தி உள்ளது.

நேற்றைய வாக்கெடுப்பில் முக்கிய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி அரசுக்கு எதிராக வாக்களித்தது. [உ-எ-3]

# ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்குச் சம்பந்தமாம்

## இந்திய அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, ஜூலை 16

ராஜீவ் காந்தி கொலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்பட்டுள்ளது என்பது இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

ராஜ்ய சபையில் காங்கிரஸ் எம். பி. ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ராஜீவ் கொலையில் சம்பந்தப்படவில்லை என்று விடுதலைப் புலிகள் ஆரம்பம் முதல் கூறிவந்தாலும் மத்திய புலனாய்வுத் துறையினர் விடுதலைப் புலிகளைச் சந்தேகித்து வந்தனர் என்றும் சவான் கூறினார். (உ-எ)

## எழுத்தாளரும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து விழுந்தது என்றும், அப்போது வீட்டின் சுவர் உட்பக்கமாக சரிந்து விழுந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் படுத்திருந்த 'ஹோலு'க்கு அருகில் உள்ள அறையில் படுத்திருந்த தாயாரும், மைத்துனி முறையான ஒருவரும் மயிரிழையில் உயிர் தப்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ தினத்தன்று நெல்லியடியிலுள்ள அவர்களது வீட்டில் இருந்து அருகேயுள்ள தாயாரின் [முடக்காடு] வீட்டுக்குச் சென்று தங்கியிருந்த போதே இச்சம்பவம் இடம் பெற்றது. [இ-15]

## 25 பேர் பலி

புதுடில்லி, ஜூலை 16

அருணாசலம் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைத் தொடர்ந்து உண்டான நிலச் சரிவு ஒன்றினால் 25 பேர் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [அ]

## மாணவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த ஆண்டு 10 இற்கு மேற்பட்ட மாணவ, மாணவிகளை இன்று காலை 9 மணியளவில் பாடசாலையில் கூடுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். [ஒ]

## இன்ரறக்ட்

யாழ். பரியோவான் கல்லூரி இன்ரறக்ட் கழக உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## லியோ கழகம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். பரியோவன் கல்லூரி லியோகழக அங்கத்தவர்களை இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலையில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

பாடசாலைகளை நடத்துவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை காலை 9.30 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். கோட்ட உதவி கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சகல கொத்தணி அதிபர்கள், தேசிய கல்லூரி அதிபர்கள், தனியார் கல்லூரி அதிபர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்கள் ஆகியோரை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கல்விசார் உறுப்பினர்களும் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர். [ஒ-5]

## பொம்மர் வர மரத்திலிருந்து விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கள் எடுக்க மரத்தில் ஏறியவர், பொம்மரைக் கண்டு பயந்து. மரத்தில் இருந்து தவறி விழுந்து மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எழுதுமட்டுவாளில் கடந்த சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

படுகாயமடைந்த நிலையில் பளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த எஸ். சணபதி [62 வயது -எழுதுமட்டுவாள்] என்னும் இவர், மறுநாள் அங்கு மரணமானார். [ஒ-117]

## கொழும்பில் காலரா

கொழும்பு, ஜூலை 16

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காலரா நோயினால் 52 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர். உத்தியோக பூர்வ வட்டாரங்கள் இத் தகலைத் தெரிவித்தன.

## உணவு பங்கீடு சம்பந்தமாக நாளை மாநாடு

உணவுப் பங்கீடு சம்பந்தமான கூட்டுறவாளர் மாநாடு, நாளை நண்பகல் 12 மணிக்கு யாழ். மணியம் கட்டடத்தில் உள்ள மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல ப. நோ. கூ. ச. தலைவர்கள், பொது முகாமையாளர்கள், பிராந்திய கூட்டுறவுப் பரிசோதகர்கள், கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஆகிய அனைவரையும் இம் மாநாட்டில் பங்கு பற்றுமாறு கூ. அ. உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

மக்கள் முன்னணி பிரமுகர்களும், கூட்டுறவுப் பகுதியினரும் இம் மாநாட்டில் கலந்து கொள்வர். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான எதிர்ப்பு ஆயுதங்கள் புலிகள் பயன்படுத்துகின்றனர்

கொழும்பு, ஜுலை 16

ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால் காயமடைந்த படையினரை மீட்பதற்கு முகாமிற்குள் ஹெலிக்கொப்டர்கள் இறங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

— இவ்வாறு இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

போராளிகளினால் முற்றுகையிடப்பட்டிருக்கும் ஆனையிறவு முகாமுக்குள் சுமார் எண்ணூறு படையினர் சிக்கிப் போயிருக்கின்றனர்.

முகாமைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பதுங்கு குழிகளில் இருந்து ஐநூறுக்கும் அதிகமான புலிகள் இயக்கப் போராளிகள் தொடர்ந்து முகாமைத் தாக்கி வருகின்றனர்.

— இவ்வாறு இந்திய வானொலி மேலும் தெரிவித்தது.

தரையிலிருந்து சுமார் 5 ஆயிரம் அடிக்குக் கீழ் இறங்கும் விமானம் மற்றும் ஹெலிக்கொப்டர்களை எதிர்த்துத் தாக்கும் ஆயுதங்கள் விடுதலைப் புலிகளின் கைவசம் இருக்க வேண்டும் என்பதை ஸ்ரீலங்கா அரசு அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [உ-எ]

# அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டே ஆகவேண்டும்

## "புரொண்ட்லைன்" ஆசிரியர் ராம்

இலங்கை அரசாங்கம் விரைவிலோ அல்லது தாமதமாகவோ பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். அங்கு நடக்கும் இராணுவச் சண்டையில் எத்தரப்பாரும் வெல்ல முடியாது. எனவே அரசு பேச்சுவார்த்தையில் இறங்கியே ஆகவேண்டும்.

இவ்வாறு "புரொண்ட்லைன்" சஞ்சிகையின் ஆசிரியர் திரு. என். ராம் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவிடம் புதிய சமரசத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகவும் அதனை அவர் மிக அவதானத்துடன் பரிசீலித்து வந்ததாகவும் "புரொண்ட்லைன்" சஞ்சிகை தனது ஜுலை 5 இதழில் குறிப்பிட்டிருந்தது.

நூறு நாட்களில் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அந்தத் திட்டத்தின் விவரத்தையும் பிரஸ்தாப சஞ்சிகை வெளியிட்டிருந்தது.

அது சம்பந்தமாக திரு. ராமிடம் கேட்டபோது —

நாம் வெளியிட்ட சமரசத் திட்டத்தின் பிரதி எமது வசம் உண்டு. அதுமட்டுமன்றி அது தமக்குக் கிடைத்ததாக ஜனாதிபதி பிரேமதாச எழுதிய பதிலின் பிரதியும் எம்மிடம் உண்டு —

ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னர் அந்தத் திட்டம் குறித்துப் பிரேமதாச அதிக அக்கறை செலுத்தவில்லை என்பது உண்மை தான். எனினும் அவர் இப்போதில்லாவிட்டாலும், தாமதித்தாவது பேச்சுவார்த்தையை ஆரம்பித்தே ஆகவேண்டும்—

இலங்கையில் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் யுத்தத்தில் எத்தரப்பாரும் வெல்ல முடியாது. எனவே அரசு அரசியல் தீர்வை நாடியே ஆக வேண்டும். வேறு மாற்று வழியில்லை — என்று தெரிவித்தார். (அ)

# ராஜீவ் கொலைச் சம்பவம்; நிலப்பிரபு ஒருவரும் கைது

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக மத்திய புலனாய்வுப் பொலீஸாரால் தேடப்பட்டு வந்த வேதாரண்யத்தைச் சேர்ந்த நிலப் பிரபு சண்முகம் என்பவர் நேற்று தஞ்சாவூர் பொலீஸாரிடம் சரணடைந்தார்.

அவரது வீட்டில் சில நாட்களுக்கு முன்பு பொலீஸார் சோதனை நடத்தினர். அப்போது அங்கு சில பொருள்களும் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள நளினி, முருகன் ஆகியோரை மேலும் முப்பது நாட்களுக்கு காவலில் வைக்க செங்கல்பட்டு நீதிவான் திரு. வடிவேலு இரத்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# பயண ஆவணங்களின்றி தங்கியிருந்த 5 தமிழர் கைது

சென்னை, ஜுலை 16

உரிய பயண ஆவணங்களின்றி தங்கியிருந்த ஐந்து இலங்கைத் தமிழர்களை தமிழ்நாடு பொலீஸார் கைது செய்து செங்கல்பட்டு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

தலா ஆயிரம் ரூபா பிணையில் அவர்களை விடுவித்த நீதிவான் எந்த நேரமும் பொலீஸில் ஆஜராகக் கூடிய நிலையில் இருக்கும்படி அவர்களுக்கு உத்தரவிட்டார்.

# ஹெலி, விமானம் மூலம் ஆட்டைத் தேடி வேட்டை!

மெக்ஸிக்கோ, ஜுலை 16

கதிர் வீச்சுக்கு இலக்கான ஆடு ஒன்று பரிசோதனையின் போது தப்பியோடிவிட்டது. இந்த ஆட்டைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் விசேட பொறி கருவிகளுடன், ஹெலிக்கொப்டர்களிலும், விமானங்களிலும் பறந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இச் சம்பவம் மெக்ஸிக்கோ நகரில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த மார்ச் மாதத்தில் பரிசோதனைக் கூடமொன்றில் கதிர் வீச்சுப் பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்ட 62 அங்கோரா இன ஆடுகளில் 10 ஆடுகள் தப்பியோடி விட்டன. இதனைத் தொடர்ந்து பரிசோதனைகள் நிறுத்தப்பட்டு தப்பியோடிய ஆடுகளில் 9 ஆடுகள் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டன.

தப்பிய மற்றைய ஆடு பிடிபடவில்லை. ஏனைய ஆடுகளுக்கு அது அச்சுறுத்தலாக உள்ளது. இந்த ஆட்டினால் கதிர் வீச்சு பாதிப்புகள் ஏனைய இடங்களுக்கும் பரவக் கூடும் என்றும், ஏனைய ஆடுகளுடன் உறவு கொண்டால் அதன் மூலம் நோய் பரவக் கூடும் என்றும் நியூ மெக்ஸிக்கோ சூழலியல் திணைக்களம் கருத்துத் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்தே இத் தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (த)

## கட்டைக்காட்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் இறங்கிய இடத்திலிருந்து சற்று முன்னேறியதும் அவர்கள் மீது புலிகள் கடும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இதனையடுத்து உக்கிரச் சண்டை வெடித்தது.

பொம்மர்கள், அவ்ரோக்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்களின் குண்டு மழைக்கு மத்தியில் நேற்று மாலை நடைபெற்ற இந்தச் சண்டை, ஆனையிறவு மோதலின் உச்சக் கட்ட யுத்தம் போன்று பெரிய அளவில் இருந்ததாக போர்முனைச் செய்திகள் தெரிவித்தன.

புலிகளின் ஆக்ரோஷத் தாக்குதலில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் உட்பட படையினர் பலர் உயிரிழந்திருப்பதாகத் தெரிகிறது. தாக்குதலையடுத்து முன்னேறிய படையினர் நிலை குலைந்து பின்வாங்கினர் என்றும் கூறப்பட்டது.

நேற்றுப் பிற்பகலில் ஆரம்பமான இந்தச் சண்டை இருள, இருள மேலும் உக்கிரமடைந்ததாக நேற்று நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்று இரவு வேளையிலும் "பரா" வெளிச்சக் குண்டுகளின் உதவியுடன், அந்தப் பகுதியில் வான் தாக்குதல்கள் நடந்துகொண்டிருந்தன.

தரையிறக்கப்பட்ட படையினர் விடுதலைப் புலிகளினால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் நிலையில் யுத்தம் நேற்று இரவும் இன்று அதிகாலையும் தொடர்ந்தது. யுத்தம் பற்றிய மேலதிக விவரங்கள் இன்று காலையில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஷெல் தாக்குதல்களை நிறுத்தக் கோரிக்கை

## அரச அதிபர் அனுப்பினார்

மக்கள் குடிமனைகள் மீது இராணுவ முகாம்களில் இருந்து கண்மூடித்தனமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஷெல் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த உத்தரவிடுமாறு யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதராலய வானொலித் தொடர்பு சாதனம் மூலம் நேற்று இந்த அவசர கோரிக்கைச் செய்தியை அவர் அனுப்பினார்.

கடந்த சில நாட்களாக பல்வேறு இடங்களிலும் குடியிருப்புக்கள் மீது இரவு வேளைகளில் ஏவப்பட்ட "ஆட்லறி" ஷெல்களால் அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்திருப்பதை அரச அதிபர் தனது செய்தியில் சுட்டிக் காட்டியுள்ளார். [அ-5]

# சட்ட விரோத ஏஜென்ஸி பொலீஸ்ரால் முற்றுகை

கொழும்பு, ஜுலை 16

கொழும்பு பிளவர் வீதியில் சட்டவிரோத தொழில் வழங்கும் ஏஜென்ஸி ஒன்றை கடந்த வாரம் பொலீஸார் முற்றுகையிட்டனர்.

அந்த ஏஜென்ஸியின் உரிமையாளர் மற்றும் ஒரு பெண் உட்பட வேறு நான்கு பேர் அச்சமயம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மோசடி செய்யப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், அடையாள அட்டைகள், பாஸ்போர்ட்டுக்களைப் பயன்படுத்தி குறைந்தது நூறு தமிழர்களை இந்த ஏஜென்ஸி ஜப்பான், ஜேர்மனி, இத்தாலி மற்றும் நாடுகளுக்கு அனுப்பியிருந்ததாக விசாரணையில் தெரிய வந்தது.

ஒரு நபரிடமிருந்து ஒன்றரை லட்சம் ரூபா வரை இந்த ஏஜென்ஸியால் வசூலிக்கப்பட்டதாம். 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணமும் இந்த ஏஜென்ஸியின் அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-எ]

# ஆசிய பிராந்தியத்திற்கு என மனித உரிமை ஆணைக்குழு

கொழும்பு, ஜுலை 16

ஆசிய பிராந்தியத்திற்கென மனித உரிமை ஆணைக்குழு அமைக்கப்படவிருக்கிறது.

தென்கொரியத் தலைநகர் சோலில் நடைபெற்ற ஆசியாவில் உள்ள வழக்கறிஞர் சங்கங்களின் தலைவர்கள் மாநாட்டில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ், தாய்வான், ஹொங்ஹொங், சீனா, இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், கொரியா, மலேசியா, மொங்கோலியா, மியன்மார் [பர்மா], நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பீன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய 17 நாடுகளில் உள்ள வழக்கறிஞர் சங்கங்களின் தலைவர்கள் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இச்சங்கத் தலைவர்களின் அடுத்த மாநாடு 1992 இல் சிங்கப்பூரில் நடைபெறும்.

# பெரும் மக்கள் கிளர்ச்சி ரஷ்யாவில் வெடிக்குமாம்

ரஷ்யாவில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு கைத்தொழில் நாடுகள் உதவாவிட்டால் அங்கு பெரும் மக்கள் கிளர்ச்சி உண்டாகும்,

லண்டன் வந்துள்ள சோவியத் ரஷ்யாவின் விசேட பிரதிநிதி பிரமிக்கோவ் இவ்வாறு தெரிவித்தார்.

ஏழு கைத்தொழில் நாடுகளின் மாநாடு லண்டனில் நேற்று ஆரம்பமாகியது.

## கொடிகாமத்தில் ஹெலி கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், ஜுலை 16

கொடிகாமம் சந்தைப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் (ஞாயிறு) மாலை 5. 30 மணியளவில் ஹெலி கிரனேட் வீச்சுத் தாக்குலை நடத்தியது.

தெய்வாதீனமாக உயிரிழப்பு ஏதும் நிகழவில்லை. (ஒ)

## மதுக் கடைகள் மூடப்படுகின்றன

சென்னை, ஜுலை 16

தமிழகத்தில் உள்ள மலிவு விலை மதுக்கடைகள் யாவும் இன்று மூடப்படுகின்றன.

புதிய அ. தி. மு. க. அரசு தனது முதலாவது தீர்மானமாக மலிவு விலை மதுக் கடைகளை மூடுவதாக அறிவித்திருந்தது.

இந்த நடவடிக்கையின் மூலம் தமிழக அரசுக்கு 332 கோடி ரூபா இழப்பு ஏற்படும். (அ)

## தி. மு. க. வரவேற்பு

சென்னை, ஜுலை 16

தமிழகத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அ. தி. மு. க. அரசு நடவடிக்கை எடுத்து வருவதை தி. மு. க. வரவேற்றுள்ளது.

இத்தகவலை தி. மு. க. பேச்சாளர் ஆலடி அருணா தெரிவித்தார். [இ-எ]

## அமெரிக்காவும் பிரான்ஸும் தயார்

பாரீஸ், ஜுலை 16

சரியான தகவல்களைக் கொடுக்க ஈராக் தவறுமானால் அந்த நாட்டில் உள்ள அணு ஆயுத நிலையங்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க தமது படைகள் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்டும் கூட்டாக அறிவித்துள்ளனர். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org